1990 சனவரி, 27]

(ஏ) சாத்தான்குளம் தொகுதியிலுள்ள குளங்களுக்கு மணி முத்தாறு நீர் விடப்பெற வேண்டியது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தண்ணீர் பிரச்சினைக்காக நான் எழுந்து நிற்கிறேன். வேறு ஒன்றும் இல்லை, அதுவும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற தண்ணீர் பிரச்சினை. இன்று காலையிலேயிருந்து கொடுமுடி ஆற்றுக்கு அனுமதி வந்துவிட்டது என்றும் எனவே கட்டவேண்டுமென்றும், பச்சை ஆற்றுக்கு அனுமதி வரப்போகிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

11-15 மணி

அதைப்போலவே நம்பியாறு புத்தன் தெருவு வரை நீட்டிக்கப்பட வேண்டும் என்பது எல்லாம் நம்முடைய வேண்டுகோள். அதோடு முக்கியமாக மணிமுத்தாறு அணையிலே இப்போது 95 அடிக்கு மேலே தண்ணீர் இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. 10 நாட்களுக்கு முன்பு என்னுடைய பகுதியிலே நான் சுற்றுப் பயணம் செய்தபோது மூன்றாவது ரீச், நான்காவது ரீச் என்று சொல்லுகின்ற அந்த இரண்டிலும் தண்ணீர்விட வெகு நாட்களாக மக்கள் கேட்டுக்கொண்டிருப்பதோடு, இந்தத் தடவை அதைப் பெற உரிமைப்படைத்த ஒரு முறை, சிப்ட் சிஸ்டம் என்று வருகின்ற வகையிலே இதுதான் முறை. அதாவது மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கு. நான் அங்கு போயிருந்தபோது பேய்க்குளம் பகுதியிலே, சாத்தான் குளத்துக்கு உட்பட்ட பகுதியிலே தண்ணீர் போனாலும், சாத்தான்குளம் பகுதியிலே தண்ணீர் வரவில்லை. சாத்தான்குளம் பகுதியிலே எல்லாம் ஒரு குடம் தண்ணீர் ஒரு ரூபாய்க்கு விற்கிறது. தயவுசெய்து அமைச்சர் அவர்களை நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். 15 அடிக்கு மேல் தண்ணீர் இருக்கிற காரணத்தால் பேய்குளம் பகுதியிலே தண்ணீர் விடப்பட்டும், விடுபட்டுப்போன பகுதிகளுக்கும், லெப்ட் அவுட் பேங்குகளுக்கும், சாத்தான் குளத்திலே இருக்கின்ற குளங்களுக்கும் தண்ணீர் உடனடியாக விட்டு அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கின்ற அளவுக்காவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல அந்த மணிமுத்தாறு அணை வருவதற்கு பெரிதும் பாடுபட்ட திரு. கோசல்ராம் அவர்களுடைய நினைவுநாள் இன்று. அந்த அணையை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும், கன்று காலிகளுக்கும், பயிர்களுக்கும் குடிதண்ணீருக்கும் வேண்டிய நீரை நீங்கள் 'மனம் உவந்து' நீர் இருக்கின்ற பொழுது என்ன கவலை என்று எண்ணுகின்ற வகையில் தயவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு கால்வாய் பாசன பகுதியை 4 ரீச்சுகளாகப் பிரித்திருக்கிறார்கள். தண்ணீர் மணிமுத்தாறில் நிறைய இருக்கும்பொழுது அந்தக் கால்வாயினுடைய பாசன பகுதி அத்தனைக்கும் தண்ணீர் தருகிறோம். அதிலே ஏதாவது தட்டுபாடு ஏற்படுமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்துப்பேசி, ரீச் ரொட்டேசன் சிஸ்டத்தின் படி தருகிறோம். அதன் அடிப்படையில் பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட் ரீச்சுக்கு தண்ணீர் கொடுத்தோம். இந்த ஆண்டு மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்குதான் தண்ணீர் தர உரிமை உண்டு. அதன் அடிப்படையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் 95 அடி தண்ணீர் இப்போது அங்கே இருக்கிறது என்று சொன்னதைப் போல, தண்ணீர் நிறைய இருக்கிற காரணத்தால் மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கு தண்ணீர் முழுக்கத்தர நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியனும் மற்றவர்களும் சொல்லும்போது பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட் ரீச்சிலே கூட சில இடங்களில் காய்ந்து போகிற நிலை இருக்கிறது என்று சொல்லும்போது, அதை நினைக்கிறபோது, தண்ணீர் இருக்கும்பொழுது மனிதாபிமான அடிப்படையில் கொஞ்சம் அவர்களுக்கும் தருகிறோம். பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட்டுக்கு தருகிறபோது மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கும் அப்படிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்குதான் இந்த முறை முழுக்க தண்ணீர் விடுவதற்கு சட்டப்படி அனுமதி உண்டு. நீங்கள் விரும்புகிறபடி தண்ணீர் விட ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். அவர்கள் இங்கே 10 நாட்களுக்கு முன்புள்ள செய்தியை சொன்னார்கள். ஆகவே, நீர் இப்போது அங்கு போயிருக்கும். நேற்றே இதை நான் அவையிலே அறிவித்தேன். நேற்றே உத்தரவும் பிறப்பித்திருக்கிறேன். தர்ட் அண்ட் போர்த் ரீச்சுக்கு தண்ணீர் போகும்.

திரு. பி.எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு அணையிலிருந்து முதல் ரீச், இரண்டாவது ரீச், மூன்றாவது ரீச், மற்றும் நான்காவது ரீச்சுக்கு எப்படி தண்ணீர் வழங்குவது என்பது பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது 'சட்டப்படி' என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அப்படி சட்டம் எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணையிலுள்ள நீரை எப்படி பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே 'ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ்' உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன், அதன் அடிப்படையில்தான் நாங்கள் செய்கிறோமே தவிர வேறல்ல.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய பிரச்சினையும் எங்களுடைய பிரச்சினையும் தீர்வதற்கு ஒரே வழி 80 அடி கால்வாய் வழியாக இன்றைக்கு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறதை அங்குள்ளவர்கள் 40 அடிக்கு கீழே கால்வாய் வழியாக விட வேண்டுமென்று பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காரணம் அப்போதுதான் அணையில் குறைவாக இருக்கும் போதும் எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் போகும். இன்னொன்று, தண்ணீர் உபரியாக இருக்கும்போது பாபனாசம் அணைக்கும் சில நேரங்களில் திறந்து விடுகிறார்கள். அப்படி திறக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டாண்டுக் காலமாக 80 அடியிலிருந்து 40 அடிக்கு தண்ணீர் வரக் காரணமே பாபநாசம் அணைக்காக தண்ணீர் திறந்து விடுவதுதான்.

11-20 மணி

மணிமுத்தாறு, தாமிரபரணியினுடைய ஒரு கிளை நதி, அந்த மணிமுத்தாறு அணை கட்டியபோது அதனுடைய முதல் உரிமை, மணிமுத்தாறில் வருகிற தண்ணீர் தாமிரபரணிக்குத் தான் போய்ச் சேர வேண்டும் என்பது. எனவேதான் 80 அடி உயரத்தில் அதற்கு மதகு அமைக்கப்பட்டு, தனிக் கால்வாய் வெட்டப்பட்டு, அது மணிமுத்தாறாகப் பாய்கிறது. அதற்குக்கீழே அடிமட்டத்தில் பூமி மட்டத்திற்கு ஒரு கால்வாய்வெட்டப்பட்டு இருக்கிறது. 80 அடி வரையில் வருகிற தண்ணீர் தாமிரபரணியிலே போய்க் கொண்டிருக்கும்; 80 அடிக்கு மேலே வந்தால்தான் மணிமுத்தாறிலே தண்ணீரைத் திறக்க முடியும். 80 அடி இருந்தால்கூட திறக்க முடியாது, 90 அடிக்கு போனால் தான் மணிமுத்தாறு கால்வாய் வழியாக தண்ணீர் வரும். இல்லாவிட்டால் ஸ்ரீவைகுண்டம் அணையிலே சர்ப்ளஸ் வாட்டர் இருந்தால்தான் இதைத் திறக்க முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் தெரிவித்த கருத்து அந்தப் பகுதி மக்களாலேயே ஏற்கப்படாத கருத்து.

(ஐ) சேலத்தில் நடைபெற்றுள்ள ஒரு கொலை சம்பவம் குறித்து.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 5-1-1990 இரவு அரசியல் காரணத்திற்காக அ.தி.மு.க.வுடைய சேலம் நகரத்தினுடைய துணைச் செயலாளர்